18th February 1959]

Sri M. KALYANASUNDARAM : போலீஸாரால் விலாசத்தை உடனே கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் பத்திரிகை மூலமாக இதை உடனே அறிவித்திருக்கலாமல்லவா ? அவ்விதம் ஏன் போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்தச் செய்தியை பத்திரிகை மூலமாக அறிவிக்க வேண்டுமென்று போலீஸாருக்குத் தோன்றவில்லை. அவ்விதம் தோன்றியது தவறு என்று அரசாங்கம் கருதவில்லை.

Sri A. A. RASHEED : Sir, has the attention of the Government been drawn to the statement of the mother of the deceased that she had not changed her address?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I have no information, Sir.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, லண்டனில் இறந்து போனவர், திடீரென்று ஏற்பட்ட விபத்து 'ஆக்ஸிடெண்டு' காரணமாக இறந்து போனபின், அவருடைய உடல் ஏறக்குறைய 17 நாட்கள் வைக்கப் பட்டிருப்பதாகத் தெரிந்தும், அதைப்பற்றி அவருடைய பெற்றோருக்கு எப்படியாவது செய்தியை அறிவிக்கவேண்டும் என்ற அக்கறை அரசாங்கத்திற்கு இல்லாததற்கு காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு அவருடைய சொந்தக்காரர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றுள்ள அக்கறை அரசாங்கத்திற்கு இல்லாமல் இல்லை.

Scarcity of kerosene

Mr. SPEAKER : This question also was not circulated and I will read it.

* 6 *S.N.Q.*—Sri S. LAZAR : Will the Minister for Home be pleased to state—

(i) whether the Government are aware of the sudden scarcity of kerosene in the market and the consequent difficulties to which the public are being subjected;

(ii) and if so, the remedial measures that are being taken by them?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (i) & (ii) The Government of India imposed a 5 per cent cut during the six month period July to December 1958, on the quantity of kerosene sold by major oil companies in view of acute foreign exchange position. Some time towards the end of December 1958 an impression gained ground that there would be a shortage in the stock of kerosene and there occurred a certain amount of panic buying of kerosene in many parts of the State, creating an artificial high demand resulting in sudden scarcity of kerosene. The retail-dealers and hawkers exploited the situation and raised the retail price of kerosene sold to the public. In Madras City, the retail-dealers were reported to have stopped selling kerosene during the last week of January 1959, on the plea that they had not received supplies. Thus the rise in selling prices was due to the activities of unsocial elements and were quite out of proportion to the gap

between the supplies and normal demand. It was also clear that the increase in selling prices was not at the producer-importer level but at the retailer-consumer level.

Remedial measures were taken immediately by all Collectors in the districts and the Collector of Madras in so far as the City was concerned. Discussions were held by them with the representatives and agents of oil companies with a view to making regular supplies of kerosene available to the public at normal price. In Tiruchirappalli, the Collector convened a conference of wholesale dealers and retail dealers including Members of the Legislature on 31st March 1959, at which the agents of the companies agreed to release the usual quota to the wholesale dealers and sub-dealers, and the retail dealers agreed to sell kerosene at 25 n.P. per bottle to the consumers. Other Collectors were also directed to take similar action in their districts in order to ensure that there was no profiteering by retailers.

Meanwhile the Government of India who had made a timely assessment of the scarcity position in regard to supplies of kerosene and its prevailing prices on an all-India basis, decided to remove all restrictions on sales of kerosene and on 7th February 1959 intimated by telegram that in order to ease the situation additional foreign exchange was being allotted to oil companies to enable increased imports of kerosene immediately and that oil companies have also been directed to remove all existing restrictions on their sales of kerosene. Wide publicity was given by this Government to the steps taken by the Government of India by means of a Press Release issued on the same day.

As a result of the various steps taken to ease the scarcity situation, it is gathered from reports received that the rise in retail selling prices that had occurred in several places of the State is being rapidly arrested and that the prices have returned or are quickly returning to normal levels. Instructions have already been issued to all Collectors for taking suitable action in the matter and the situation is being closely watched for prompt action in the light of further developments, if any, in this regard.

SRI S. LAZAR : தலைவர் அவர்களே, ஏதோ மற்றைய மாகாணங்களுக்கு ஒரு பகுதி இங்கிருந்து கடத்தப்பட்டு போய்விட்டதால்தான் இந்த விலையேற்றம் ஏற்பட்டது என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : மொத்த வியாபாரிகள் குறிப்பிட்ட விலைக்குத்தான் விற்கவேண்டும் என்ற நிர்ணயம் ஏதாவது இருக்கிறதா ? இப்போது மொத்த வியாபாரிகள் 5–1–0 லிருந்து 5–9–0-க்கு விலையை உயர்த்திவிட்டார்கள். இது சர்க்காருக்குத் தெரியுமா ? தெரியுமென்றால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்விதம் விலையை கட்டுப்படுத்த வேண்டுமென்றால் விலை கண்ட்ரோல் கொண்டு வரவேண்டும்.

18th February 1959]

மேலும் வியாபாரிகள் எதாவது தவறுதலாக நடந்து கொண்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : இந்த மண்ணெண்ணெய் விலையேற்றத்தை பயன்படுத்திக்கொண்டு பதுக்கிய வியாபாரிகள் யாராவது அரசாங்கம் கண்டு பிடித்து அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த மாதிரி நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படவில்லை.

SRI M. KALYANASUNDARAM : விலையேற்றத்தை தடுப்பதற்கு கண்ட்ரோல் ஏற்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது மொத்த வியாபாரிகளுக்கு 5–1–0 என்று விலை நிர்ணயித்து அதற்கு மேல் டின் ஒன்றுக்கு மூன்று அணா கமிஷனும் கொடுக்கிறார்கள். ஆகவே இவ்விதம் சப்ளை செய்யக்கூடிய கம்பெனியார் இந்த விலைக்கு மேல் விற்கக்கூடாது என்று சொன்னாலும், மொத்த வியாபாரிகள் தங்கள் லாபத்தை பெருக்கிக் கொள்வதற்காக விலையை ஏற்றிவருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிற்சில சமயங்களில் இந்த நிலைமை ஏற்படலாம். அதைப்பற்றி அரசாங்கம் அவ்வப்போது கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இம்மாதிரி பதுக்குகின்றவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள், அவ்விதம் நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய சட்டம் இல்லையா ? அல்லது சட்டமிருந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையா ? இப்போது 15 தினங்களாக நாட்டில் இருந்துவரும் நிலைமையை சமாளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது நடைமுறையில் இதற்கு என்ன சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்கு எவ்வளவு தெரியுமோ அந்த அளவுதான் அரசாங்கத்திற்கும் தெரியும். இந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் பற்றாக்குறை ஏற்பட்டதினாலும் சில வியாபாரிகளுடைய நடத்தையும்தான். இதற்கு விசேஷமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படவில்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. CALLING ATTENTION TO LABOUR DISPUTE IN THE UNITED BLEACHERS (PRIVATE) LTD., COIMBATORE.

MR. SPEAKER : I have received notice from Sri S. Pakkirisami Pillai and Sri P. S. Chinnadurai, under rule 40 of the Assembly Rules, that they wish to raise a matter of urgent public importance. As per the rules, only one Member can raise the point. Sri P. S. Chinnadurai will raise the point. I allow him to raise the point in a short speech. 10–30 a.m.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மேட்டுப்பாளையம் யுனைடெட் பிளீச்சர்ஸ் நிர்வாகத்தினர் 144 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். தங்களை